24th August 1955]

1955 (L.A. Bill No. 14 of 1955), as passed and agreed to by the Council on the 23rd August 1955 without any amendment and signed by me.'

(2) 'In accordance with rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras District Municipalities (Amendment) Bill, 1955 (L.A. Bill No. 19 of 1955), as passed and agreed to by the Council on the 23rd August 1955 without any amendment and signed by me.

(3) 'In accordance with rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras City Improvement Trust (Amendment) Bill, 1955 (L.A. Bill No. 20 of 1955), as passed and agreed to by the Council on the 23rd August 1955 without any amendment and signed by me.'

(4) 'In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1955 (L.A. Bill No. 21 of 1955), as passed and agreed to by the Council on the 23rd August 1955 without any amendment and signed by me.' "

III.—ADJOURNMENT MOTION UNDER RULE 41 OF THE ASSEMBLY RULES *RE* LOW WATER LEVEL IN METTUR DAM CAUSED BY LETTING OUT WATER FOR SUGARCANE CULTIVATION.

DEPUTY SPEAKER :—" I have received notice of the following adjournment motion under rule 41 from Sri S. Ramalingam—

'This House stands adjourned to discuss a matter of urgent public importance, viz., the serious situation and the anxiety caused among the ryots of Tanjore district due to the shortage of water in the Mettur Dam where the water level has gone down to sixty feet due to the reason that in summer the Government have let out water for sugarcane cultivation unusually.'

I wish to know from the hon. Member how this is a definite matter of urgent public importance."

* **Sri S. RAMALINGAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு மேட்டூர் அணைக்கட்டில் நீர் மட்டம் 60 அடிக்குக் குறைவாக இறங்கிவிட்டது. அதனால் தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகளிடையே சாகுபடி காலம் பூர்த்தியாவதற்குள் தங்களுக்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற பீதியும் கலவரமும் ஏற்பட்டிருக்கிறது. பூரா நாளைக்கும் தண்ணீர் வரவில்லையென்றால் செய்த சாகுபடி தீய்ந்து போய்விடும், அதனால் உணவுப் பஞ்சமும் ஏற்படலாம் என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. 9-40 a.m.

" இதற்கு சர்க்கார் எப்படிக் காரணமாக இருக்கமுடியும் என்று கேட்கலாம். நெல் சாகுபடி முடிந்தவுடன் மேட்டூர் அணையிலிருந்து தஞ்சாவூருக்குத் தண்ணீர் வராது. ஏனென்றால், சென்ற கோடை காலத்தில் ஆரூரான் சர்க்கரைத் தொழிற்சாலைக்குச் சொந்தமான கரும்பு நிலங்களுக்கு வேண்டிய தண்ணீரைத் திறந்துவிட்டார்கள். அதைக் கூட சபையில் எடுத்துக் காண்பித்தோம். வழக்கத்திற்கு மாறாக சர்க்கரைத் தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்புத் தோட்டங்களுக்காக தண்ணீரைத் திறந்துவிட்டதினால் பின்னால் ஒரு வேளை இடைஞ்சல் ஏற்படலாம், மேட்டூர் அணையிலும் தண்ணீர்த் தட்டு ஏற்படலாம் என்று நாங்கள் அப்பொழுதே எடுத்துக்காண்பித்தோம்."

" அப்பொழுது சர்க்கார் அளித்த காரணங்கள் என்ன ? ' தண்ணீர் குறையாமல் நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் ' என்று வாக்குறுதியளித்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியவில்லை. 60 அடிக்குக் கீழே தண்ணீர் குறைந்துவிட்டது. ஆகவே, இது விஷயத்திற்குச் சர்க்கார் தான் பொறுப்பு. இப்பொழுதும் குடிமுழுகிவிடவில்லை. கிருஷ்ணராஜசாகரத்தில் 120 அடிக்குமேல் தண்ணீர் இருக்கிறது. நம்முடைய சர்க்கார் மைசூர் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி, அங்கிருந்து தண்ணீரை நமக்கு அதிகமாக வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்க்க முடியும். இதை விவாதிப்பதற்காகத்தான் ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறேன். இதற்குச் சர்க்கார்தான் பொறுப்பு என்று மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Sri P. RAMAMURTHI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேட்டூர் அணையில் நீர்மட்டம் அறுபது அடிக்குக் குறைந்திருப்பதற்கும், அதனால் தஞ்சாவூர் ஜில்லாவில் சாகுபடி காலத்தில் தண்ணீர் கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டிருப்பதற்கும் சர்க்கார்தான் பொறுப்பு. இந்தப் பிரச்னை மிக அவசரமாகக் கவனிக்கவேண்டிய ஒரு பிரச்னையாகும். இது தஞ்சை ஜில்லாவிலுள்ள விவசாயிகள் எல்லோரையும் பாதிக்கும்படியான ஒரு அவசரமான பிரச்னை. விவசாயத்தை காலா காலத்தில் நடத்த வேண்டும் என்பது அவசரமான ஒரு விஷயம்.

" சர்க்கார் இதற்கு எப்படிப் பொறுப்பு என்றால் ஏற்கெனவே கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் சொன்னதுமாதிரி ஒரு சர்க்கரைத் தொழிற்சாலைக்கு வேண்டிய கரும்புப் பயிருக்காக தண்ணீர் விடுவது என்று சொன்னால் பூரா தண்ணீரையுமே விட்டாகவேண்டும். ஆயிரம் ஏக்கர் பாய்வதற்கு மட்டும் தண்ணீர் விடுவது என்பது முடியாத காரியம். ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான அளவு நிலங்களுக்குப் பாயக்கூடிய தண்ணீரை விட்டாக வேண்டும். அப்படி அதிகமாக விடப்பட்ட தண்ணீர் வீணாகக் கடலுக்குப் போய்ச் சேரவேண்டியிருக்கும். அம்மாதிரி நடவடிக்கையில் சர்க்கார் இறங்கியதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் தண்ணீர்த் தேக்கம் இருக்குமேயானால் அதற்கும் தண்ணீர் விடப்படும் என்று சட்டம் செய்து கொண்டு, அதற்குப்பிறகு விட்டிருந்தால் அதன் அர்த்தம் வேறு. குறிப்பிட்ட அளவு என்ன என்று நிர்ணயம் செய்யவில்லை. அடுத்த வருஷம் சரியாக மழை பெய்யாமல் போனால் என்ன ஆகும் என்ற கணக்கும் நிர்ணயம் செய்யவில்லை. இந்த இரண்டு விஷயமும் சர்க்கார் செய்யாமல் இருந்துகொண்டிருப்பது சர்க்காருடைய பொறுப்பு. இது ரொம்ப முக்கியமான விஷயமும் கூட."

* **The Hon. Sri C. SUBRAMANIAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எந்த இடத்திலோ ஏதோ இந்தச் சர்க்கார் ஒரு சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்புத் தோட்டத்திற்குத் தண்ணீர் கொடுத்ததால்தான் இந்தக் கஷ்டங்களெல்லாம் வந்துவிட்டன என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். நாம் முதன் முதலில் முடிவு செய்யவேண்டிய பிர்சனை என்னவென்றால் நம்முடைய நாட்டிலே தொழில்கள் வேண்டுமா வேண்டாமா என்பதுதான். நம் ராஜ்யத்திலுள்ள மக்களின் தேவைக்கான சர்க்கரை வட நாட்டிலிருந்து இங்கு அதிக விலையில் இறக்குமதி செய்யப்படுகிறது. அதோடு, அதிலே ஏற்படக்கூடிய லாபம் பூராவும், தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் பூராவும் வேறு பிரதேசத்திற்குச் செல்கிறது. அந்த நிலைமையில் நாம் ஏதாவது செய்யவேண்டியது அவசியமல்லவா ? நம் ராஜ்யத்திலேயே நல்ல கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய வசதி இருக்கிறது. 'அதை வைத்துக் கொண்டு, இங்கேயே சர்க்கரை உற்பத்தி செய்து, நம்முடைய பகுதிக்கு மட்டுமல்ல மற்ற பகுதிகளுக்கும் கொடுக்க முடியும் என்ற முறையிலே இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்

24th August 1955] [Sri C. Subramaniam]

திருக்கிறோம். அதைப்பற்றியும் சபையில் நாம் விவாதிக்கப்போகிறோம். முதலிலே நாம் யோசனை செய்யவேண்டியது இந்த சர்க்கரைத் தொழில் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான். வேண்டுமென்றால் ஆரூரான் ஆக இருந்தாலும் சரி, வேறூரானாக இருந்தாலும் சரி அங்கே அந்தக் கரும்புப் பயிருக்குத் தண்ணீர் விட்டுத்தான் ஆகவேண்டும். இதிலே கஷ்டம் என்னவென்றால் சிலருக்கு இந்தத் தொழிலை தாங்களே ஆரம்பிக்கவேண்டுமென்ற ஆசை. ஒருவர் ஆரம்பிக்க மற்றவர்களுக்குப் பொறாமை. இதுதான் இதில் முக்கியமான கஷ்டம். தொழில் அபிவிருத்தி வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி நம் மனதிலே எந்தவிதமான விருப்பு வெறுப்புமில்லாமல் பார்ப்போமேயானால் தொழில் அவசியம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். தொழில் அவசியம் என்று சொன்னால் அந்தக் கரும்பு உற்பத்திக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.''

SRI S. SWAYAMPRAKASAM :—" இன்றையதினம் ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருப்பது கரும்பு ஆலையைப்பற்றியல்ல. கரும்பு ஆலை வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றியும் அல்ல. தஞ்சாவூர் ஜில்லாவில் சாகுபடி செய்வதற்குத் தண்ணீர் இல்லை. சட்டசபை விதி 40ன் கீழ் நான் ஒரு பிரேரணை நேற்றையதினம் கொடுத்திருக்கிறேன். அதேவிஷயத்தைப்பற்றி இன்றையதினம் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர் ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறார். தஞ்சை ஜில்லாவிலே இன்றையதினம் தண்ணீர் தட்டுப்பாடாக இருக்கிறதென்பதைப்பற்றி எல்லோரும் கவலைப்
பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லை என்பதுதான் முக்கிய 9-45
மான விஷயம். அதைப்பற்றிதான் சர்க்கார் பதில் சொல்லவேண்டும். a.m.
அதற்காகத்தான் நேற்று நானும் இன்றைக்கு அவர்களும் பிரேரணைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆரூரான் ஆலையைப்பற்றியோ, சர்க்கரைத் தொழில் வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றியோ பிரச்னை இல்லை. ஆகையால் மந்திரி அவர்கள் பொருத்தமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்."

DEPUTY SPEAKER :—"In the motion it has been mentioned that the Government have let the water for sugarcane cultivation. So, the Hon. Leader of the House is explaining it."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாமல் இல்லை. கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தினர் ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொடுப்பதற்கு முன்னால் கனம் அங்கத்தினர் ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்களையும் கலந்துகொண்டு கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவருடைய யோசனையைக் கேட்காமலேயே இந்தப் பிரேரணை இப்பொழுது வந்திருக்கிறது. ஒத்தி வைப்புப் பிரேரணையிலும், அதைப் பிரேரித்துப் பேசும் போதும் குறிப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி நான் பதில்சொல்லியாக வேண்டும். ஆகவே, நான் பேசுவது இப்பொழுது சபைமுன் இருக்கும் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு சம்பந்தம் இருக்கிறது, பொருத்தமானதும்கூட.

" இன்னொரு விஷயத்தையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். குறிப்பட்ட எக்கருக்குத் தண்ணீர் விடாமல் ஏராளமான எக்கர் நிலத்திற்குப் பாயக்கூடிய தண்ணீர் வீணாக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிடப்பட்டது. அதிகப்படியான தண்ணீர் விடப்படவில்லை. நம்முடைய மின்சார இயந்திரங்கள் ஓடுவதற்கு ஓரளவு தண்ணீர் விட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டியிருக்கிறது. அந்தத் தண்ணீர்தான் சர்க்கரை மில்லுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறதேயொழிய தனிப்பட்டு அதிகமாக கொடுக்கவில்லை என்று அங்கத்தினர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

"ஜூன் மாத ஆரம்பத்திலேயே நீர் மட்ட அளவு சாதாரணமாக இருப்பதைவிட அதிகமாகவே இருந்தது. 90 அடிக்கு வந்தது. ஆரம்பத்திலேயே எந்தக் காலத்திலும் அவ்வளவு அதிகமாக நீர் மட்டம் இருந்ததில்லை. இப்பொழுது குடகில் வழக்கத்தைவிட மிகக் குறைவாக மழை பெய்திருப்பதுதான் கஷ்டத்துக்குக் காரணம். மழையின் அளவு 25 அங்குலத்திற்குக் குறைந்திருக்கிறது. குடகில் மழை குறைவாகப் பெய்திருக்கிறது. இதே தண்ணீர்த் தட்டுப்பாடு மைசூரிலும் ஏற்பட்டிருக்கிறது. மழை ஏன் பெய்யவில்லை, சரியாக மழை பெய்ய சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று வேண்டுமானால் கேட்கலாம். அது தனிப்பட்ட பிரச்னை. கம்யூனிஸ்டுக் கட்சியினர் அப்படிக்கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்பொழுது இருப்பதை வைத்துக்கொண்டு அதிக பயங்கரமான நிலைமை ஏற்பட்டு விட்டதாகவும் வீண் பீதி அடையவேண்டியதில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவிலே பத்து நாட்களாக நல்ல மழை பெய்திருக்கிறது. ஆகையால், தண்ணீர் அளவு குறைந்தாலும் இப்பொழுது இருக்கும் பயிர்கள் பாதிக்கப்படமாட்டாது. குறுவை முடிந்து சம்பா பயிர் காலத்தில் நதியில் தண்ணீர் விடுவது, இயற்கை நிலையைப் பொறுத்திருக்கிறது. நல்ல முறையில் மழை பெய்தால் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. குடகில் நல்ல மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையத்தவரும் எதிர்பார்க்கின்றனர். (**Interruption.**) வானிலை ஆராய்ச்சியாளரின் அறிக்கைப் பிரகாரம் மழை பெய்தாலும் சரி, அவர்களை மீறிப் பெய்தாலும் சரி எப்படியாவது மழை பெய்தால் சரி. கூடிய சீக்கிரத்தில் மழை வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதைவிடக் கஷ்டமான காலத்தில் நாம் நிலைமையைச் சமாளித்திருக்கிறோம். நிலைமையைச் சமாளிக்க முடியும் என்ற உறுதியுடன் இருக்கவேண்டுமென்று அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். மக்களுக்கும் இதே செய்தியைத் தான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் இதை அவசரப் பிரச்னையாக இப்பொழுது விவாதிக்கவேண்டியதில்லை."

Sri M. PALANIYANDI :—" தஞ்சை ஜில்லாவில் மட்டும் தண்ணீர் தட்டுப்பாடு என்பதல்ல. திருச்சி ஜில்லாவில் ஐயன் வாய்க்காலிலும் தகராறு வரும். இருக்கும் தண்ணீரை தயவு செய்து சரியாக அளந்துவிட்டு எல்லா வாய்க்கால்களுக்கும் சரிசமமாகக்கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

DEPUTY SPEAKER :—" The hon. Member should not go into details. I am going to give my ruling."

Sri M. PALANIYANDI:—" இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் இல்லாத காலத்தில் இந்தியன் பாங்கு மேற்பார்வையில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு சரியாக தண்ணீர் உபயோகப்படுத்த வழி செய்தார்கள். அதேமாதிரி தட்டு இல்லாமல் செய்ய இப்பொழுதே வழி செய்யவேண்டும்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" அதனால்தான் கட்டளை, புள்ளம்பாடி திட்டங்களை எடுத்துக்கொள்ளலாமா வேண்டாமா என்று யோசனை செய்யவேண்டியிருக்கிறது."

Sri S. DAIVASIGAMONEY :—" Sir, there is another serious consequence which will follow as a result of the shortage of water, namely, the failure of electricity. What are the Government going to do in that matter? "

24th August 1955]

DEPUTY SPEAKER :—" It is not a point to be discussed here. Now, this is not a matter of recent occurrence, because the water is being let from June. We are now in the month of August. The Government are not responsible for the failure of rains. Moreover, this is a matter of day-to-day administration. The matter to be discussed must involve something more than the administration of law. So, I rule this adjournment motion out of order."

IV.—STATEMENT UNDER RULE 40 *RE* FAILURE OF THE GOVERNMENT TO SUPPLY ENROLMENT FORMS TO THE VOTERS IN MALABAR.

*** SRI K. MADHAVAN NAMBIAR ;—" Mr. Deputy Speaker, Sir, I rise to call the attention of the Government to a matter of urgent public importance, namely, the failure to supply enrolment forms to the voters in Malabar.**

" സർ, ഇത്തവണ വോട്ടേഴ്സ് ലിസ്റ്റ് പുതുക്കുന്ന കാര്യത്തിൽ വളരെയധികം ക്രമക്കേടുകൾ പറ്റിയിട്ടുണ്ട്. പഴയ ലിസ്റ്റനുസരിച്ച് വോട്ടർമാരായിരുന്ന പലരുടേയും പേർ ഇന്ന് ലിസ്റ്റിൽനിന്നു നീക്കംചെയ്യപ്പെട്ടിരിക്കുന്നതായിട്ടാണ് കാണുന്നത്. ഉദാഹരണം പറയുകയാണെങ്കിൽ ലോകസഭയിലെ കമ്മ്യൂണിസ്റ്റ് കക്ഷിനേതാവായ ശ്രീ എ. കെ. ഗോപാലന്റെയും എന്റെയും മറ്റു പലരുടേയും പേർ ഇന്ന് ലിസ്റ്റിലില്ല. അതുപോലെ നീക്കം ചെയ്യേണ്ട പേരുകൾ ലിസ്റ്റിൽനിന്ന് നീക്കാത്തതിന്നും ഉദാഹരണങ്ങളുണ്ട്. മരിക്കാത്ത ആളുകൾ മരിച്ചതായി ലിസ്റ്റിൽ കാണാം. ഉള്ള ആളുകളെ ഉൾപ്പെടുത്താതെയും ഇല്ലാത്ത ആളുകളെ ഉൾപ്പെടുത്തിയും സർവ്വത്ര കുഴപ്പം പിടിച്ചമട്ടിലാണ് വോട്ടേഴ്സ് ലിസ്റ്റ് പുതുക്കിവെച്ചിരിക്കുന്നത്. ക്രമക്കേടുകൾക്കു ആക്ഷേപം കൊടുക്കുന്നതിനും പേർ ഉൾപ്പെടുത്തിക്കിട്ടുന്നതിനും വേണ്ട ഫാറങ്ങൾ മിക്ക വില്ലേജുകളിലും ആവശ്യമനുസരിച്ചു കിട്ടിയിട്ടില്ല. അത് അച്ചടിച്ചു ആവശ്യമായത്ര അയച്ചുകൊടുത്തിട്ടില്ലെന്നാണ് പറയുന്നത്. അതുകൊണ്ട് പലർക്കും വോട്ടേഴ്സ് ലിസ്റ്റിൽ പേര് ഉൾപ്പെടുത്തിക്കിട്ടാൻ നിവൃത്തിയില്ലാതെ വന്നിരിക്കുന്നു. ഇത് അടിയന്തിരമായ ഒരു കാര്യമാണ്. വളരെ ഗൌരവമുള്ള ഒരു കാര്യവുമാണ്. അടുത്തുതന്നെ, അതായത്, സെപ്റ്റംബർ, ഒക്ടോബർ മാസങ്ങളിൽ മുനിസിപ്പാലിറ്റികളിലും ഒട്ടനേകം പഞ്ചായത്തു ബോർഡുകളിലും തിരഞ്ഞെടുപ്പു നടക്കുവാൻ പോവുകയാണ്. കഴിഞ്ഞതവണ വോട്ടുചെയ്ത ആളുകൾക്കുപോലും ഇത്തവണ വോട്ടുചെയ്യാൻ നിവൃത്തിയില്ലാതെ വന്നിരിക്കുന്നു. ഇതിന്നു എത്രയും വേഗത്തിൽ പരിഹാരം കാണേണ്ടതുണ്ട്. അതുകൊണ്ടു ആവശ്യമുള്ള ഫാറങ്ങൾ ഉടനെ അയച്ചുകൊടുക്കണമെന്നും വോട്ടേഴ്സ് ലിസ്റ്റിലെ ക്രമക്കേടുകളെല്ലാം പരിഹരിക്കാൻ ഉടനെ നടപടിയെടുക്കണമെന്നും ഗവമ്മേണ്ടിനോടഭ്യർത്ഥിക്കുവാനാണ് ഞാൻ ഈ പ്രശ്നം ഇപ്പോൾ ഇവിടെ ഉന്നയിക്കുന്നത്."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Deputy Speaker, Sir, the Government have received representations from some political parties on the matters raised in the notice, mainly, in respect of Chirakkal taluk. This year intensive revision of the rolls, that is, the preparation of the preliminary list of amendments by house-to-house inquiry is done in the Malabar district in the areas comprising five Assembly constituencies including the Cannanore Assembly constituency, the Palghat Municipality and three irrigation project areas. In other areas revision of the rolls is done only non-intensively, that is, the preliminary list of amendments is prepared